NP

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 6.

ந.க.எண். 022696 / ஜெ2 / 2025,        நாள் : 01.04.2025

……………………

பொருள் : தொடக்கக் கல்வி – 100 days challenge – 1 முதல் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களை சார்ந்த பள்ளிகளின் ஆசிரியர்கள் 100 நாட்களில் 100% வாசித்தல் மற்றும் கணித அடிப்படைத் திறனில் தயார்படுத்தி முன்னேற்றம் அடையச் செய்தல் – மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வாயிலாக மாணவர் கற்றல் அடைவை சோதித்தறியும் மதிப்பீட்டு வினாத்தாள் (Assessment Tool) உருவாக்கம் செய்யப்பட்டுள்ளமை – பள்ளி மாணவர்களின் அடைவுத் திறனை வட்டார வள மைய ஆசிரியப் பயிற்றுநர்கள் வாயிலாக 4,552 பள்ளிகளில் 4.4.2025 மற்றும் 16.4.2025 ஆகிய நாட்களில் சோதித்து அறிதல் – அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

பார்வை :
1. மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கிய அறிவுரைகள்
2. தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.022696/ஜெ2/2025, நாள்.13.03.2025

……………………

தமிழ் & ஆங்கிலம் வாசித்தல் திறன் மற்றும் கணக்கு பாடத்தில் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய திறன்களில் தயார் நிலையில் உள்ளதாக மாவட்டக் கல்வி அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட 4,552 பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் அடிப்படைத் திறனை அளவிடும் செயல்பாடு பின்வருமாறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | வகுப்பு | பாடம் | மதிப்பீடு செய்யப்படும் நாள் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 1 முதல் 3 | தமிழ், ஆங்கிலம் & கணிதம் | 04.04.2025 | குறைந்தபட்சம் ஒரு வகுப்பிற்கு 5 மாணவர்கள் |
| 2 | 4 மற்றும் 5 | தமிழ், ஆங்கிலம் & கணிதம் | 16.04.2025 | குறைந்தபட்சம் ஒரு வகுப்பிற்கு 5 மாணவர்கள் |

மாணவர்களின் திறனறியும் இந்நிகழ்வினை வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர்கள் மூலம் மேற்கொள்ளவும் வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலம் சார்ந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்கிட அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர்

3.4.2025

பெறுநர்

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)
அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் } உரிய
அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்கள் } வழியாக